## ரஜ்கம பிரதேச சபை

## காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 03 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 18 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்டம்பர் 29 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரஜ்கம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 உயர் கணக்கீட்டு நடைமுறைகள்

------------------------------------------------------

மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு பிரதான பேரேட்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளை பதிவதற்காக நாட்குறிப்பு பயன்படுத்தியிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,099,228 இற்கான காகிதாகிகள் (பொதுக் களஞ்சியம்) ரூபா 2,651,560 இற்கான மின்சார இருப்பு மற்றும் ரூபா 151,780 இற்கான ஆயுள்வேத இருப்பின் பெறுமதி மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் அக் கணக்கின் மீதி ரூபா 3,902,568 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிரதான பேரேட்டின் பிரகாரம் திரண்ட நிதியம் மற்றும் பற்றாக் குறைக் கணக்கின் மீதி ரூபா 32,258,192 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 30,204,036 என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 2,054,156 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 424,236 இற்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் ரூபா 294,500 இற்கான மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் மூலதனப்படுத்தப்படவில்லை.

(ஈ) 04 தண்ணியக்க புதுப்படுத்தல் நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டிற்கான வட்டியினை கணித்து கணக்குகளுக்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காகிதாகிகள் இருப்பு ரூபா 20,295 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 32,087 என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 11,792 தொகையினால் மிகையாகக் காணப்பட்டுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான கிடைக்க வேண்டிய மூலதன உதவி மற்றும் செலுத்த வேண்டிய மூலதன செலவுகள் ரூபா 4,605,740 தொகை நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்படாமையால் ஆண்டிற்கான மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர் மற்றும் மூலதனச் செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது பொதுக் கணக்கில் இருந்து நிர்மாண வேலைக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட காசு மாற்றம் ரூபா 500,000 தொகையினை மூலதன உதவி பெறுவனவு என பதியப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மூலதன உதவி ரூபா 500,000 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டிற்காக கிடைத்திருந்த மூலதன உதவி ரூபா 12,147,073 தொகை மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி பெறுவனவு என காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர்கள் ரூபா 12,147,073 வீதம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) முன்னைய ஆண்டுகளின் போது நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் என ஏற்பாடு செய்திருந்த 28 நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ரூபா 7,064,706 தொகை ஆண்டிற்கான மூலதன செலவுகள் என பதிவு செய்யப்பட்டிருந்தமையால் மூலதனச் செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 7,064,706 வீதம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் நிர்மாண வேலைக் கணக்கில் இருந்து பொதுக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட பணமாற்றம் ரூபா 4,317,134 தொகையினை மூலதனச் செலவுகள் என பதியப்பட்டிருந்தமையினால் மூலதன செலவுகள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஓ) முன்னைய ஆண்டுகளின் தடுத்து வைத்தல் பணத்தை விடுவித்தல் ரூபா 707,994 இனை மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் என பதியப்பட்டிருந்தமையால் மூலதன செலவுகள் மற்றும் வைப்புக்கள் ரூபா 707,994 வீதம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டிற்கான பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 4,308,480 தொகை எனவும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 7,800,000 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 3,491,520 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 8,351,597 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.5 தொங்கல் கணக்குகள்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 636,821 இற்கான தொங்கல் கணக்குகளில் வரவு மீதியை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 41,354,659 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள், முறைப்படி பேணப்படும் கடன்கொடுத்தோர் பதிவேடு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் பொது மக்கள் வினோத மற்றும் பொழுதுபோக்கு விடயங்களுக்காக அல்லது ஏதேனும் நூலக அல்லது ஏதேனும் கல்விசார், விஞ்ஞான சார், நன்மை தரும் அல்லது நலன்புரி நிறுவனங்களுக்கு உதவி பெறும் நோக்கில் அல்லது ஒரு வருடத்திற்கு மொத்த கூட்டுத்தொகை ரூபா 1,000 யினை மிகைக்காத பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உதவித் தொகை ஒன்று மற்றும் அமைச்சரின் கடிதத்தின் மூலதமான பூர்வாங்க அங்கீகாரத்துடன் பிரதேச சபையினால் அவ் விடயத்திற்காக அங்கீகரிக்கப்படுகின்ற ஏனைய உதவித் தொகைகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அமைச்சரின் அங்கீகாரம் இன்றி உதைப்பந்தாட்ட போட்டி ஒன்றிற்காக ரூபா 20,000 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுவான முக்கியத்துவம் உடைய கருமங்கள் பற்றிய விழா செலவுகள் தொடர்பாக ஒரு வருடத்திற்கான மொத்தக் கூட்டுத்தொகை ரூபா ஒரு ஆயிரத்தை விஞ்சாத வகையில் காணப்பட வேண்டும். அத்துடன் அதனை மிகைக்கும் இடத்து அதற்காக அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்தை பெற்றிருக்காமால் உள்ளூராட்சி விளையாட்டு விழாவிற்காக ரூபா 125,460 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132 இன் கீழ் அடங்காத விடயம் ஒன்றான வெளிநாட்டு கல்விச் சுற்றுலா ஒன்றிற்றகாக முறையான அங்கீகாரம் ஒன்று இன்றி பிரதேச சபையின் உப தலைவருக்கு இடைநேரப் படி மற்றும் இணைந்த படி என ரூபா 43,623 தொகை ஒன்று 2014 அக்டோபர் 23 திகதி பிரதேச சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2013 பாதீட்டுப் பிரேரணை மூலம் 2002 இன் 14 இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் 2013 ஜனவரி 01 திகதியில் அல்லது பின்னர் ஆரம்பிக்கப்படும் வரி அறவீடு செய்யக் கூடிய காலப்பகுதி (ஒரு மாதம் அல்லது மூன்று மாதம்ங்கள்) வரிக்கு உட்பட்ட வழங்கல்களின் பெறுமதியில் கூட்டுத்தொகை ரூபா 03 மில்லியன் அல்லது ஒரு வருடத்திற்கு 12 மில்லியன் ரூபா மிகைக்காத விடத்து பண்டங்கள் மற்றும் சேவைகள் மீது வரி இன்வொயிஸ் வழங்குதல் அல்லது பெறுமதி கூட்டிய வரி அறவீடு செய்தல் சட்ட ரீதியற்றது என குறிப்பிட்டிருந்த போதிலும், சபையில் வரி அறவிடக் கூடிய வழங்கல்களின் பெறுமதி காலாண்டிற்கு 3 மில்லியன் ரூபா அல்லது ஆண்டிற்கு 12 மில்லியன் ரூபாவை மிகைத்து இருக்கும் போது சபையினால் 2014 ஆண்டின் போது ரூபா 591,907 இற்கான பெறுமதி கூட்டிய வரி அறவீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ஏதேனும் ஒரு கருமத்திற்கு வழங்கப்படும் கட்டுநிதி ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 20,000 இற்கான வரையறைக்கு உட்பட வழங்கப்பட வேண்டும் என இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 371(2)(ஆ) இல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக 07 சந்தர்ப்பங்களில் ரூபா 1,075,000 இற்கான முற்பணம் என வழங்கப்பட்டிருந்தது. அதே போல் பெற்றிருந்த முற்பணத்தை தீர்க்காமல் காணப்பட்ட போதிலும் தொடர்ந்தும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) துணைக் கட்டுநிதி வழங்கப்பட்ட கருமம் பூர்த்தி செய்யப்பட்ட உடனே தீர்க்கப்பட வேண்டும் என நி.பி. 371(2)(இ) இல் குறிப்பிடப்பட்டிந்த போதிலும் 05 வருடங்களை விஞ்சியுள்ள ரூபா 33,500 மற்றும் 03 வருடங்களை மிகைத்த ரூபா 1,075,000 இற்கான தீர்க்கப்படாத முற்பணங்கள் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 5,111,310 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 4,420,314 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

---------------------------------

#### 2.2.1 வீத வரி

-------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 10,795,713 இற்கான வீத வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2 வாடகை

---------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 676,534 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

---------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 84,622 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 8,772,214 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,281,450 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.5 தொலைபேசி தொலை தொடர்பு டவர்களுக்கான கட்டணம்

-------------------------------------------------------------------------------------------------

நகர அபிவிருத்தி மற்றும் பொது மக்கள் நிலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் 2009 ஏப்ரல் 17 திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 159/8 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் தொலைபேசி தொலை தொடர்பு டவர் ஒன்றினை பயன்படுத்துவதற்கு முன்னர் இணக்கச் சான்றிதழ் ஒன்றினை பெற வேண்டும் என குறிப்பிட்ட போதிலும் 2014 மே 07 திகதி முதல் குளீகொட பகுதியில் பயன்படுத்தும் செலுத்துகை டவர்களுக்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் பயன்படுத்தியமையால் வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 6(vii) பிரிவின் பிரகாரம் 2014 மே 07 முதல் 2015 செப்டம்பர் 11 திகதி வரை 493 நாட்களுக்காக ரூபா 24,650 தொகை தண்டப் பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையயின் பிரகாரம் 2014 ஆண்டிற்கான சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் 12 அங்கத்தவர்களினால் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று வழங்கியிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 03 அலுவலர்களிடம் மற்றும் இறந்த 03 பேருடைய 09 வருட காலமாக நிலுவையாவுள்ள ரூபா 26,760 இற்கான கடன் முற்பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

------------------------------------------------------

பயன்படுத்தப்படாமல் அழிவு நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் அகற்றுதல் பற்றி ஜனாதிபதிச் செயலாளரினால் 2013 ஜூன் 05 திகதிய

இலக்கம் : PCMD/PR/2013 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவடையும் நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அகற்றுவதற்கான செயற்பாடு ஒன்றினை தயாரிக்கும் படி அறிவித்திருந்த போதிலும், சபைக்கு சொந்தமான 02 டிரக்டர் வண்டிகள் மற்றும் கொங்கிரீட் கலவை இயந்திரம் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டதென 2015 செப்டம்பர் 11 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

--------------------------------------------------

சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 11 வாகனங்களின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் சபையினால் நடத்தப்படுகின்ற போதிலும் 2015 செப்டம்பர் 11 வரை அவ் வாகனங்களின் உரிமை சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

------------------------------------------------

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து 2014 நவம்பர் 23 ஆந் திகதி, 1” கல்வணய்ஸ் குழாய்கள் 544 சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(i) சபைக்கு கிடைத்திருந்த 544 கல்வணய்ஸ் குழாய்கள் பொருட் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த குழாய்களில் 168 குழாய்கள் ஹிக்கடுவ நகர சபைக்கு 2014 நவம்பர் 26 திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ii) 2015 ஏப்ரல் 06 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது ஹிக்கடுவ நகர சபையில் காணப்பட்ட 105 குழாய்களும், ரத்கம பிரதேச சபையில் 42 உம் காணப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டது.

(iii) இதன் பிரகாரம் கிடைத்திருந்த 1” கல்வணய்ஸ் குழாய்கள் 544 இல் 397 குழாய்களுக்கான பற்றாக்குறை ஒன்றும் காணப்பட்டது. இதன் பிரகாரம் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 439,479 ஆகும்.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

--------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் இடையே கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்